LIBRA
27 APR
STATE LEGISLATU

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 5th September 1960

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past nine of the clock, Mr. Speaker (THE HON. DR. U KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS

Tannery farm for Arundathipalayam.

* 416 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்கு பதிலளிப்பாரா—

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் 22-ம் தேதியில் நட்சத்திரக் குறியிட்ட கேள்வி எண் 499-க்கு அளித்த பதிலையொட்டி போளூர் தாலூகா அருந்ததிபாளையத்தில் மாதிரி தோல் பதனிடும் பண்ணை ஆரம்பிப்பது எந்த நிலையில் உள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The site for the location of the Model Village Tannery at Arunthathipalayam in Chetpet Block, North Arcot district, has been selected and the estimates for the construction of buildings have been approved. The construction work will be taken up shortly.

SRI S. M. ANNAMALAI : இது தனியார் துறையில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறதா அல்லது கூட்டுறவு இயக்கத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்டிருக் கிறதா ? போளூர் தாலூகாவில் அருந்ததிபாளையத்தில் இந்தப் பண் ணையை ஆரம்பிக்க சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சர்க்காரால்தான் நடத்தப்படுகிறது.

SRI M. P. SARATHI : ஸார், ஆரம்பக் கேள்விகளுக்கும் தமிழில் பதில் அளிக்குமாறு பல முறை கேட்டுக் கொண்டோம். இதைச் சர்க்கார் கவனித்து தமிழில் பதில் அளிக்க முற்படுவார்களா ?

MR. SPEAKER : இதற்கு விதிகளை மாற்றவேண்டும். விதிகளில் தமிழிலும் பேசலாம், ஆங்கிலத்திலும் பேசலாம் என்றிருக்கிறது. மந்திரிகள் தமிழிலேயே பதில் அளிக்கவேண்டுமென்றால் நீங்கள் விதிகளை மாற்ற நோட்டீஸ் கொடுக்கவேண்டும். அடிக்கடி இந்த மாதிரி கேட்பதில் பிரயோ ஜனம் இல்லை.

SRI A. A. RASHEED : May I know, Sir, whether the tannery will be a tannery with a farm or just a tannery?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This will be a model village tannery centre.